[2002 அக்டோபர் 30

வருகின்றன. மேலும் புதிய கால்நடைக் கிளை நிலையங்கள் தொடங்குவதற்குத் தற்காலிகமாகத் தடையுள்ளது. மேற்படி தடை நீங்கியதும் நிதிநிலைக்கேற்ப, மாண்புமிகு உறுப்பினர் கோரியுள்ளபடி முருங்கத்தொழுவு கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் ஒன்று அமைப்பது பற்றி ஆய்வு செய்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு முடிவு செய்யும் என்பதை இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 84, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.*

84—

மாணவர் விடுதி

**4905—திரு. கே. ஆறுமுகம்:*

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பின்தங்கிய மாணவர்கள் தங்கும் விடுதியில் அங்குள்ள விடுதிக் காப்பாளர்களே மாணவர்களுக்குப் பயிற்றாசிரியர்களாகவும் பணியாற்ற வேண்டும் என்ற ஆணையைப் பிறப்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மாணவ, மாணவிகள் தங்கும் விடுதிகளில் அங்குள்ள காப்பாளர்களே மாணவர்களுக்கு டியூட்டர்களாகப் பணியாற்ற வேண்டும் என்று ஏற்கெனவே ஆணையிடப்பட்டுள்ளது. துறையின் கையேட்டில் பகுதி 2-இல் பிற்சேர்க்கையில் விதி 6-ன்படி விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவிகள் தங்கள் பாடங்களை ஒழுங்குமுறைப்படுத்தி நல்லமுறையில் பயின்று வருகின்றனரா மற்றும் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெறுகின்றனரா என்பதைக் காப்பாளர்கள்/காப்பாளினிகள் கண்காணிக்க வேண்டும். மேலும், விதி 20-ன்படி, மாணவ மாணவிகள் சிறந்த முறையில் கல்வி பயில, காப்பாளர்கள்/காப்பாளினிகள் பயிற்சி அளித்து உதவ வேண்டும். மேலும், பதிவேடு ஒன்றைப் பராமரித்து, அதில் மாணவ மாணவிகள் மதிப்பெண்களைப் பதிவு செய்து அவர்களது கல்வி முன்னேற்றத்தைக் கண்காணிப்பது காப்பாளர்கள்/காப்பாளினிகளின் முக்கியப் பணிகள் ஆகும் என்று ஏற்கெனவே ஆணையிடப்பட்டுள்ளது. எனவே பிற்படுத்தப்பட்டோர்,

2002 அக்டோபர் 30]
மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நல மாணவர்கள் தங்கும் விடுதியில் அங்குள்ள காப்பாளர்கள்/காப்பாளினிகள் மாணவர்களுக்கு டியூட்டர்களாகவும் பணியாற்ற வேண்டும் என்று மீண்டும் புதிதாக ஆணை பிறப்பிக்கத் தேவையில்லை என்று இம்மாமன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆறுமுகம்.

திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அரசாங்கம் அறிவித்திருக்கிற அறிவிப்புக்கிணங்க அங்கே ஒவ்வொரு மாணவர் விடுதியிலும் படிக்கின்ற மாணவர்களை ஊக்குவிக்கிற பயிற்சியாளர்களுக்கு, சிறப்பாகப் பணியாற்றுகிற அந்த விடுதிக்கு, ஊக்கத் தொகையும் பரிசும் வழங்கப்படுமா? அதுமட்டுமல்லாமல், பல்வேறு மாணவர் விடுதியிலே, இப்பொழுது அங்கே இருக்கிற பயிற்சியாளர்களும் சமையலர்களும், தங்குவது என்பதிலே குறைபாடு இருக்கிறது. அவற்றையெல்லாம் களைய அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கே சிரமமாக இருக்கிறது. இந்த நிலையில் ஊக்கத்தொகை எங்கிருந்து கொடுப்பது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களே ஆலோசனை கூறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மாணவர் விடுதியிலே படிக்கிற மாணவ மாணவிகள் மிகவும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்கள். நாம் அவர்களை மேலும் ஊக்கப்படுத்த வேண்டும். இப்பொழுது பணக்காரர்கள் தங்களது பிள்ளைகளைக் காலை எழுந்ததும் டியூஷனுக்கு அனுப்புகிறார்கள். ஆனால் அந்த விடுதியில் இருக்கின்ற மாணவ மாணவிகள் சரியாகப் படிக்க வேண்டும். அவர்களும் டாக்டர், இன்ஜினியர் போன்ற மேற்படிப்புக்கு வர வேண்டும். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற தேர்வுக்கு வரவேண்டும் என்று சொன்னால், அவர்களை அந்த விடுதியிலே உள்ள காப்பாளர்கள் மிகவும் ஊக்குவித்தால்தான் மேலுக்கு வரமுடியும். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் இதற்கு உதவ வேண்டும். ஒரு சிறிய நிதிதான் இதற்குச் செலவாகும். அப்படி ஊக்குவித்தால் மிகச் சிறந்த மாணவ, மாணவிகளை நாம் உருவாக்க முடியும்.

[2002 அக்டோபர் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆறுமுகம், ஆசிரியர்கள் மாணவர்களை ஊக்குவிக்க வேண்டுமேயொழிய, ஆசிரியர்களை நாம் எப்படி ஊக்குவிப்பது? வினா எண் 85, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

85—

மணி மண்டபம்

***5925**—திரு. நா. சந்திரமோகன்:

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி கோவிந்தராஜனுக்கு சீர்காழி நகரில் மணி மண்டபம் கட்டுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் கொடுத்த வரலாற்றுச் சிறப்புமிக்க சீர்காழி தொகுதியில் பிறந்த திரைப்படப் பின்னணிப் பாடகர், கலைமாமணி சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள், தமிழிசையை மூச்சாகக் கொண்டவர்கள். கர்நாடக சங்கீதத்தை மரபு முறை வழுவாமல் மிகச் சிறப்பாகப் பாடியவர்; எண்ணற்ற பக்திப் பாடல்களைப் பாடியவர்; திரை இசையில் தனக்கே உரித்தான தனித் தன்மையோடு ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடி, கம்பீர கான மணி என்ற பட்டம் பெற்றவர். தமிழக அரசின் கலைமாமணி விருதும், மத்திய அரசின் பத்மஸ்ரீ விருதும், தமிழக அரசின் சிறந்த பின்னணிப் பாடகர் என்ற விருதும், சங்கீத நாடக அகாடமி விருதும், இதுபோன்ற பல விருதுகளைப் பெற்றவர். ஆலயங்கள் கட்டுவதற்கு இசை நிகழ்ச்சிகளை நடத்தியவர். ஏழை மக்கள் கல்வி பயில உதவிகள் வழங்கியவர். தமிழக மக்களின் காவல் தெய்வமாகவும், உச்ச நீதிமன்றத்தின் மூலம் காவிரித் தண்ணீரைப்